அடையாள இலக்கம்:

C

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2019

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# மேற் பிரிவு

(10 – 11 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.** (புள்ளிகள்: 5)

1. ஆட்டுமந்தை ____________ + ____________
2. பூந்தோட்டம் ____________ + ____________
3. நீரோடை ____________ + ____________
4. ஞாயிற்றுக்கிழமை ____________ + ____________
5. துப்பறிபவர் ____________ + ____________

**(ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.** (புள்ளிகள்: 5)

1. அன்பு + இல்லை = ____________
2. பெண் + ஒருத்தி = ____________
3. தமிழ் + இலக்கியம் = ____________
4. மனம் + தளராமல் = ____________
5. மழை + காலம் = ____________

**(இ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ப் பொருள் கொண்ட சொற்களை எழுதுக.**
(புள்ளிகள்: 5)

1) மலிவு ____________
2) நல்லொழுக்கம் ____________
3) மண் ____________
4) குறை ____________
5) இன்பம் ____________

**(ஈ) பின்வரும் சொற்களின் உயர்திணைப் பெண்பாற் சொற்களை எழுதுக.**

(புள்ளிகள்: 5)

1) மாமா ____________
2) நடிகன் ____________
3) மாணவன் ____________
4) தோட்டக்காரன் ____________
5) பணக்காரன் ____________

**(உ) அடைப்புக் குறிக்குள் இருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கீழே தரப்பட்ட வசனங்களிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.**

**குறிப்பு** : சரியான விடையினைக் கோடிட்ட இடத்தில் எழுதாதவர்களுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது.**

(புள்ளிகள்: 10)

1) சண்டை இட்டுக்கொண்ட நண்பர்கள் தனித்தனியே ________________ சென்றனர். (பிரிந்து, பிறிந்து)

2) வகுப்பறையின் ஒரு ________________ இருக்கும் மரப்பேழையில் கதைப்புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. (மூளையில், மூலையில்)

3) குடியானவன் கோழிகளுக்குத் தானியங்களை வாரி ________________ . (இறைக்கிறான், இரைக்கிறான்)

4) மணமக்கள் தம் பெற்றோர்களின் ________________ வணங்கி ஆசி பெற்றனர். (தாழ், தாள்)

5) அரசன் இட்ட ________________ மீற யாருக்கும் அதிகாரம் இல்லை. (ஆனையை, ஆணையை)

6) ________________ இல்லாத பூக்களும் உண்டு. (மணம், மனம்)

7) மேடையின் ________________ விலகியதும் காட்சி தோன்றியது. (திரை, திறை)

8) திருமண மண்டப வாயிலின் அழகிய ______________________ மக்கள் மனதைக் கவர்ந்தது. (கோலம், கோளம்)

9) அரசர்கள் நாட்டு நலனுக்காக ________________ வெட்டி நீர்நிலைகளைப் பேணினர். (குலம், குளம்)

10) ____________ ஏறுதல் என்பது இன்று மக்களுக்கு ஒரு நல்ல பொழுதுபோக்காக உள்ளது. (மழை, மலை)

**(ஊ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்கள் எழுதுக.** (புள்ளிகள்: 20)

**குறிப்பு : ஐந்து (5) சொற்களுக்குக் குறையாமல் வசனம் அமைய வேண்டும்**

1. திரைப்படம்:________________________________________________________________

2. குடும்பம்:________________________________________________________________

3. வங்கி:________________________________________________________________

4. மேற்கல்வி:________________________________________________________________

5. பாரதியார்:________________________________________________________________

6. மலர்மாலை:________________________________________________________________

7. சனிக்கிழமை:________________________________________________________________

8. விமானநிலையம்:________________________________________________________________

9. அரங்கேற்றம்:________________________________________________________________

10. செம்மொழி:________________________________________________________________

**(எ) கோடிட்ட இடங்களிலே பொருத்தமான சொற்களைப் பாவித்துக் கீழே தரப்பட்ட வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:** (புள்ளிகள்: 10)

1. கம்பர் இராமயணத்தை தமிழில் ____________________ .
2. தமிழ்ப்பள்ளிகளில் மாணவர் ____________________ அதிகரித்து வருகிறது.
3. ______________________ என்னும் நூலை இளங்கோவடிகள் எழுதினார்.
4. திருக்குறள் அறம் பொருள் இன்பம் பற்றிச் சொல்வதால் __________________________ நூல் எனப் போற்றப்படுகிறது.
5. வயதான பெற்றோரை ____________________________ பிள்ளைகளது கடமையாகும்.
6. நிழலின் அருமை ____________________________ தெரியும்.
7. பூந்தோட்டத்தின் ____________________________ உள்ள தாமரைப் பூக்கள் அழகாக இருக்கின்றன.
8. அகிலா முதியவர் மீது __________________________ கொண்டு தன் இருக்கையை அளித்தாள்.
9. நோயற்ற வாழ்வே குறைவற்ற ______________________ என்பது பழமொழி.
10. காவலர்கள் அரசரின் ________________ அமைச்சரைக் கைது செய்தனர்.

**(ஏ) கீழே தரப்பட்ட கவிதையைப் கருத்தூன்றிப் படித்த பின்னர் கீழேயுள்ள கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.** (புள்ளிகள்: 10)

அல்லும் பகலும் நல்ல
ஆர்வத்தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

கன்றை நினைத்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தார் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்

வித்துவான் வேந்தனார்
(ஒழுக்கம் - கவிதையின் ஒரு பகுதி)

**<u>கேள்விகள்:</u>**

1) மாணவர்கள் எவ்வாறு கல்வி கற்க வேண்டும் என்று இக்கவிதையில் கூறப்பட்டுள்ளது? (2 புள்ளிகள்)

____________________________________

____________________________________

2) கல்வி கற்பதனால் பெறும் வாழ்வியல் நெறி எது என முதல் பந்தியில் கூறப்பட்டுள்ளது? (2 புள்ளிகள்)

____________________________________

____________________________________

3) இவ்வுலகில் உயர்ந்த அறம் என்று கூறப்படுவது எது? அந்த அறம் பற்றிய உமது கருத்தை விளக்குக. (3 புள்ளிகள்)

____________________________________

____________________________________

____________________________________

____________________________________

4) நன்றி புரிந்தவர்களை நாம் எப்படி நினைக்க வேண்டும் என்பதை விளக்குக. (3 புள்ளிகள்)

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

**(ஐ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களாற் பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.** (புள்ளிகள்: 15)

அரசரொருவருக்கு ஒரு வினோத ஆசை ஏற்பட்டது. அவர் தன் நாட்டு மக்கள் எல்லோரையும் ________________ அவர், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆட்டைக் கொடுத்தார். பிறகு அவர் அவர்களிடம் இரண்டு மாதம் ____________ ஆடுகளை மீண்டும் தன்னிடம் அழைத்து வர வேண்டும் என்று கூறினார். அவர்கள் மீண்டும் ஆடுகளை கொண்டு வரும் போது அவை இலைகளை ________________ என்றார். அவ்வாறு ஆட்டை ____________ பத்தாயிரம் பொற்காசுகள் தருவதாகக் கூறினார். எல்லோரும் ஆடுகளுடன் வீடு திரும்பினர்.

பாலன் மிகவும் ________________ அவன் ஆட்டுக்கு முன்னால் இலைகளை போடுவான். அவற்றை ஆடு ஆவலுடன் தின்ன வரும் போது ஒரு ________________ அதன் முகத்தில் அடிப்பான். அவ்வாறாக பாலன் நாள்தோறும் செய்து வந்ததால் ஆடு இலைகளைக் கண்டாலே ______________ ஓடியது. இலைகளுக்குப் பதிலாக அவன் ஆட்டுக்குச் சோற்றைக் கொடுத்து வளர்த்தான் அரசர் ______________ நாளன்று எல்லோரும் ஆடுகளுடன் அரசைக் காணச் சென்றனர். வேந்தர் ஒரு மைதானத்தில் நிறைய இலைகளை ______________ வைத்திருந்தார். மற்றவர்களின் ஆடுகள் ஆவலோடு ஓடிச் சென்று இலைகளை மேய்ந்தன. ஆனால் பாலனின் ஆடு மட்டும் அவன் கையிலிருந்த தடிக்குப் பயந்து இலைகள் இருந்த பக்கம் போகாமல் நின்றது. அதை ______________ நோக்கிய மன்னர், தான் கூறியபடி பாலனுக்குப் பொற்காசுகனை அளித்தார். பொற்காசுகளைப் பெற்ற பாலன் மன்னருக்கு நன்றி கூறிவிட்டு மகிழ்ச்சியோடு சென்றான்.

| | | |
|---|---|---|
| 1. மிரண்டு | 2. வியப்புடன் | 3. தடியால் |
| 4. குவிந்து | 5. நிரப்பி | 6. வரவழைத்தார் |
| 7. தின்னக்கூடாது | 8. அன்போடு | 9. வளர்பவர்களுக்கு |
| 10. அறிவித்த | 11. புத்தசாலி | 12. கழித்து |

**(ஐ) குறைந்தது 40 சொற்களில் கீழே தரப்பட்ட தலைப்பைப் பற்றி எழுதுக.** (புள்ளிகள்: 15)

எனக்குப் பிடித்த கதை